**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அவிநாசி.**

**O.S No.269/2018** **Date:19.06.2024**
**(P.W– 1)**

திரு. திருமலைசாமி த/பெ.ஆறுமுகம்
**<u>1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :
சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) தாவா சொத்தை எனக்கு கிரையம் செய்து கொடுத்தவர் யார் என்றால் தமிழ்செல்வன் ஆகும். 3ம் பிரதிவாதி எனக்கு கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். 3ம் பிரதிவாதி அதிகாரம் கொண்ட முகவர் என்ற கோதாவில் கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். கிரைய ஆவணப்படி தாவா சொத்தின் உரிமையாளர் குழந்தையப்பன், சுப்பிரமணியம், சக்திகிரி சாமி, மாரப்பகவுண்டர், ஆராக்கவுண்டர் ஆகியோரிடமிருந்து 3ம் பிரதிவாதி அதிகாரம் பெற்று கிரையம் கொடுத்தார் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கிரைய ஆவணம் வா.சா.ஆ.3 ஆவணத்தின் படி 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் இல்லை என்றால் சரிதான்.
2) 2ம் பிரதிவாதி திருவேங்கடம் என்பவர் கட்டிட பொறியாளர் என்றால் சரிதான். தாவா சொத்தில் 2ம் பிரதிவாதி திருவேங்கடம் கட்டிடம் கட்டி கொடுத்தார் என்றால் இடம் கொடுத்து கட்டிடம் கட்டி கொடுத்தார். நான் கிரையம் பெற்ற சொத்தில் சைட் எண்.3–ல் மேல்புறம் ஒரு பகுதி என்று கிரையம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். கிரையம் பெற்ற விஸ்தீரணம் 2044 1/4 சதுரடி என்றால் சரிதான். 2044 1/4 சதுரடிக்குள் தான் வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். சைட் எண்.3–ல் நான் கிரையம் பெற்ற போக பாக்கி இருக்கிற இடம் நான் கிரையம் பெற்ற தேதிலேயே 4ம் பிரதிவாதி கிரையம் பெற்றுள்ளார் என்றால் எனக்கு தெரியாது. 15.09.2016ம் தேதி வா.சா.ஆ.3 ஆவணத்தின்படி 2044 1/4 சதுரடி கிரையம் பெற்றேன் என்றால் சரிதான். 15.09.2016 தேதியில் 4ம்

பிரதிவாதி நான் கிரையம் பெற்ற இடம் போக மீதி உள்ள இடத்தை கிரையம் பெற்றிருப்பது எனக்கு தெரியும் என்றும், அதை நான் மறைக்கிறேன் என்றால் தெரியாது.

3) 1, 2 பிரதிவாதிகளுக்கு தாவா சொத்தின் மீது எந்த உரிமையோ பாத்தியமோ இல்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். சைட் எண்.3–ஐ மொத்தமாக வாங்குவதற்கு 3 பிரதிவாதியிடம் கேட்டேன் என்றும், ஆனால் போதிய பணம் இல்லாததால் அதில் ஒரு பகுதியை மட்டும் கிரையம் பெற்றேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் இட விண்ணப்பதில் 2ம் பிரதிவாதி கையெழுத்து போட்டதற்காக அவர் உரிமையாளராக மாட்டார் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணம் வீடு கட்டுவதற்கான செலவு தொகை அடங்கிய ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் 1, 2 பிரதிவாதிகளுக்கு எந்த உரிமையும் இல்லை என்பதால் அவர்கள் என்னிடம் பணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல.

4) 1, 2 பிரதிவாதிகள் மீது எந்த பரிகாரம் கோர எனக்கு அருகதை இல்லை என்றால் சரியல்ல, 1, 2 பிரதிவாதிகளை இந்த வழக்கில் தரப்பினராக சேர்த்தது தவறு என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை தாவா சொத்தில் கிழபுற பகுதியை கிரையம் கேட்டதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. தாவா சொத்தை எனக்கு விற்பதாக சொல்லி எந்த பணமும் 1, 2 பிரதிவாதிகள் என்னிடம் பெறவில்லை என்றால் சரியல்ல. வீடு கட்டி கொடுப்பதற்காக மட்டுமே பணம் பெற்றார்கள் என்றும், வீடு கட்டி முடிந்ததும் அவர்கள் பணி முடிந்துவிட்டது என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளுக்கு நான் கிரையம் பெற்ற சொத்து அல்லது அந்த இடத்தின் கிழபுற பகுதியில் உரிமை உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யாத சூழ்நிலையில் இந்த வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கிரையம் பெற்ற சொத்திற்கு கிழபுற இடத்திற்கு கிரைய ஒப்பந்தம், அதிகார ஆவணம், உறுதிமொழி ஆவணம்

அல்லது கிரைய ஆவணம் எதுவும் உள்ளது என்பதை காண்பிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வது போல ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், தற்போது ஆவணம் தாக்கல் செய்துள்ளதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

5) ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாத சூழ்நிலையில் விளம்புகை பரிகாரமும், உறுத்துகட்டளை பரிகாரம் பெற எனக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. 1, 2 பிரதிவாதிகளை பொறுத்து இந்த வழக்கு தள்ளுபடியாக வேண்டும் என்றால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2024.06.19 19:13:59 +0530

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.